சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு
ஹவுஸ்மெயிட்ஸ் (HouseMaids)-20
சம்பளம் ரூபா 750/-இலங்கைக்காசு
இரண்டு புகைப்படப் பிரதிகளுடன்
விண்ணப்பத்தை அனுப்புக.
நேர்முகப்பரீட்சை
யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
விண்ணப்ப முடிவு திகதி 19-06-79
குட்வில் (T) ரவல்
N 635 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
## The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78
மலர் 21 வைகாசி: 24 றஜப்: 11 இதழ் 117
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7-6-79

SRI LANKA JAFFNA
RECEIVED
1979-6-27
PERIODICALS DIVISION
LIBRARY

சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு
மெக்கானிக்ஸ் (Mechanics)—3
எலெக்ரிசியன்ஸ் (Electricians —3
வெல்டர்ஸ் (Welders) —3
நான்கு வருட அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்
அனுபவ சான்றிதழ்களின் போட்டோ ஸ்டாற் பிரதிகளும் இரண்டு புகைப்படங்களுடன் விண்ணப்பிக்கவும்.
சம்பளம் ரூபா 3000-00
இலங்கைக் காசு
குட்வில் (T) ரவல்
N 635 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

### சில பிரச்னைகளில் இன்னமும் சிக்கல்

# அமைச்சர்களின் முறையான மாநாடு இன்று ஆரம்பம்

## சம்பிரதாயமாக நேற்று
### ஜே. ஆர். தொடக்கிவைத்தார்

(கொழும்பு)

சர்வதேச உறவுகளில் மாத்திரமல்ல, உள்நாடுகளிலும் பொருளாதார ரீதியில் நீதியும், நியாயமும் நிலவுவது, எதிர்காலச் சுபீட்சத்திற்கு அவசியமானது என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியகத்தின் அமைச்சர்கள் மகாநாட்டில் கூறினார்.

வன்முறைப் பேச்சுக்களையும், வன்செயல்களையும் தவிர்த்து, அமைதி முறையில் முன்னேற்றம் காணவேண்டுமென்றும் ஜனாதிபதி கூறினார்.

அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியகத்தின் அமைச்சர்கள் மகாநாடு நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. என்றாலும் அமைச்சர்களின் முழுமையான மகாநாடு தொடர்ந்து நடைபெறும் இன்று பகல் 11 மணிவரை ஒத்திவைக்கப் பட்டது.

சில பிரச்னைகள் குறித்து இன்னமும் பல்வேறு நாடுகளின் குழுக்களிடையிலும் ஒருமைப்பாடு ஏற்படாமையே மகாநாடு நடைபெறுவது ஒத்திப்போடப்பட்டமைக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. மகாநாடு கூடுவது இன்று வரை பின்போடப்படுவதை இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் அறிவித்தார். சில விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் இதில் முடிவு ஏற்படாவிடில் மகாநாடு கூடுவதில் மேலும் காலதாமதம் ஏற்படக்கூடும் என்றும் வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஹமீத் அறிவித்தார்.

நேற்றுக் காலை பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியகத்தின் வெளிநாட்டு அமைச்சர்கள் மகாநாட்டை இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா ஆரம்பித்துவைத்தார்.

மகாநாட்டின் ஆரம்பவிழாவிற்கு இலங்கை அமைச்சர்

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ். நகரில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில மாதங்களாக யாழ் நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துவருவதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். சென்றவாரம் மட்டும் யாழ் நகரில் ஐந்து சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ்பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கே. கே. எஸ். வீதியில் உள்ள சலூன் ஒன்றின் முன்னால் ஒருவர் தமது சைக்கிளை வைத்துவிட்டு சலூனுக்குச் சென்று முகச்சவரம் செய்துவிட்டுவந்து பார்த்தபோது சைக்கிளைக் காணவில்லையென்றும், ஓட்டுமடத்தைச் சேர்ந்த எஸ். திருநாவுக்கரசு என்பவரும், இரவு படுக்கைக்குப் போகுமுன் 500 ரூபா பெறுமதியான ஹேர்ட் மாஸ்ரர் சைக்கிளை வீட்டில் வைத்துப்பூட்டிவிட்டுப் படுத்ததாகவும் விடிந்தபின் எழுந்து பார்த்தபோது சைக்கிளைக் காணவில்லை என்று சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்த எஸ். மாதவலிங்கமும், யாழ் ரயில்நிலையத்தின் முன்னால் 800 ரூபா பெறுமதியான றலி சைக்கிளை வைத்துவிட்டு ரயில் நிலையத்தினுள் சென்று திரும்பி வந்துபார்த்தபோது சைக்கிளைக் காணவில்லை என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லெட்சுமண ஐயர் என்பவரும், 1200 ரூபா பெறுமதி வாய்ந்த றலி சயிக்கிளை சுப்பிரமணியம் பூங்காவில் வைத்துவிட்டு பூங்காவைச் சுற்றிவந்தேன். பின் சைக்கிள் வைத்த இடத்தில் வந்து பார்த்தபோது சைக்கிளைக் காணவில்லை என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ் சிவராசநாதனும், நாச்சிமார் கோவிலடியில் உள்ள சைக்கிள் திருத்தும் கடையில் 600 ரூபா பெறுமதி வாய்ந்த தமது சைக்கிளை திருத்துவதற்காக வைத்துவிட்டு வீடுசென்றேன். வீட்டில் இருக்கும் போது சைக்கிள் களவாடப்பட்டுவிட்டதாக அறிந்தேன் என்று அதே இடத்தைச் சேர்ந்த ரி. ஜெயடபிரகாசம் என்பவரும் யாழ். பொலிசில் புகார் செய்துள்ளனர்.

சைக்கிள் திருட்டைக் கண்டு பிடிப்பதில் பொலிசார் தீவிர முயற்சி மேற்கொண்டுவருகின்றனர். (கொ)

### சாராயத் தவறணை உரிமையாளர்
## காரில் செல்கையில்
### துப்பாக்கிமுனையில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

இளைஞர் மூவர் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற துணிகரச் சம்பவமொன்று நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

குருநகர் பொலிஸ் பகுதியிலுள்ள சாராயத் தவறணையில் அன்று நடைபெற்ற வியாபாரப் பணமான பதினையாயிரம் ரூபா ரொக்கப்பணத்தை எடுத்துக்கொண்டு தாம் காரொன்றில் வீடு நோக்கிச் சென்ற போது கைத்துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள் மூவர் வந்து துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி காரைமறித்தனர் என்றும் தாம் காரை நிறுத்தியதும் தம்மைப் பயமுறுத்தி தம்மிடமிருந்த பணத்தில் மூவாயிரத்து நானூற்றி ஐம்பது ரூபா ரொக்கத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டு ஓடிவிட்டனர் என்றும் சாராயத்தவறணை உரிமையாளர் கணபதிப்பிள்ளை கார்த்திகேசு யாழ் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

அவர் தமதுபுகாரில், குருநகரிலிருந்து கே கே எஸ் வீதியிலுள்ள எனது வீட்டிற்கு காரில் காரில் செல்கையில் மூன்று இளைஞர்களும் காருக்கு எதிரில் வந்து துவக்கைக் காட்டி பணத்தைப் பறிக்க முற்பட்டனர் நான் கூக்குரலிட்டேன் அப்போது மூவரும் என்னிடம் இருந்த பணத்தில் மூவாயிரத்தி நானூற்றி ஐம்பது ரூபாவைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டனர். அம் மூவரும் துவக்கைக் காட்டிப் பயமுறுத்தும்போது பன்னீராயிரம் ரூபாவை மறைத்து வைத்துவிட்டேன் எனக் கூறியுள்ளார்.

இக் கொள்ளைச் செய்தி கிடைத்ததும் யாழ். பொலிசார் கொள்ளையர் மூவரையும் கண்டுபிடிப்பதற்காக குருநகரிலும், யாழ் நகரிலுமுள்ள பல இடங்களில் தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர். [கொ]

## கலைஞருக்கு வாழ்த்து

(கொழும்பு)

தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியின் 56வது பிறந்த நாளை முன்னிட்டு கொழும்பு கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத் தலைவர் திரு. எ. நவஜோதி வாழ்த்துச்செய்தி யொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## பிரதமர் சீனா செல்வார்

(கொழும்பு)

பிரதமர் திரு ஆர் பிரேமதாசா இந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் சீனாவுக்கு குறுகிய கால உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கிறார் என்று தெரிகிறது.

ஆகஸ்டில் லுசாக்காவில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பாரிலிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிச் செல்லும் பிரதமர் அங்கிருந்து சீனாவுக்குச் செல்வாரென்று தெரிகிறது. சீனாவின் அழைப்பின் பேரில் பிரதமர் செல்வதாகக் கூறப்படுகிறது.

### புதிய கம்பூச்சியாவுக்கு அனுமதி
## இலங்கை எதிர்க்கட்சித் தலைவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியகத்தின் அமைச்சர்கள் மாநாட்டில் கம்பூச்சியாவின் புதிய அரசின் பிரதிநிதிகள் குழுவையே அதிகாரபூர்வமான குழுவாக அங்கீகரித்து அனுமதிக்கவேண்டுமென இலங்கை எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் வற்புறுத்தி ஒரு மகஜரை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தனவிடம் கையளித்தனர்.

எதிர் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், டாக்டர் என். எம். பெரேரா, திரு. வி. தர்மலிங்கம், டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா, திரு. வாசுதேவ நாணயக்கார, திரு. பீட்டர் கெனமன் ஆகியோர் இம்மகஜரில் கைச்சாத்திட்டுள்ளனர். (ம)

### தனங்கிளப்பு வயிரவர் கோயிலில்
## உயிர்ப் பலியிடுவதற்கு இடைக்காலத் தடை
### சாவகச்சேரி நீதவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தொகுதியிலுள்ள தனங்கிளப்பு ஒளிசுட்டான் வைரவர் கோயிலில் உயிர்ப்பலியிடுவதற்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் திரு. பாலகிட்ணர் நேற்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தார்.

இக்கோவிலில் நேற்று முன் தினம் கொடியேற்றப்பட்டு அடுத்த வியாழக்கிழமை உயிர்ப் பலி நடைபெறவிருந்தது இக்

[6ம் பக்கம் பார்க்க]

# அமிரின் அழைப்பை ஏற்றிருந்தால் எமது கதை முடிந்திருக்கும்

## சன்சோனிக் கமிஷன்முன் நூர்தீன்

(கொழும்பு)

''எதிர்க்கட்சித் தலைவர் 16ந் திகதி காலை 8 மணியளவில் பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் நிலவும் நிலைமை பற்றி சுருக்கமாகக் கூறி பொலிஸ் அதிபரையும் என்னையும் உடன் லைவரங்கள் இடம்பெற்ற முக்கிய இடங்களுக்கு வருமாறு கூறினார். அங்கு நாங்கள் போயிருந்தால் இங்கு நாம் சாட்சியமளித்திருக்க முடியாது; எமது கதையே முடிந்திருக்கும்''

இவ்வாறு உதவிப் பொலிஸ் அதிபர் ஐனுப் எம் என் நூர்தீன், சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் குறுக்கு விசாரணையின்போது கூறினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. அண்டலூட் மணிவாசகத்தால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது ஐனுப் நூர்தீன் மேலும் கூறியதாவது:-

நான் யாழ். கச்சேரியில் நடந்த மாநாடுகள் எதிலும் பங்கு பற்றவில்லை. பாதுகாப்பமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ ரி ஜெயசிங்கா கூட்டிய மகாநாட்டில் நானும் பொலிஸ் அதிபரும் கலந்துகொண்டது நினைவிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பதட்டநிலை ஏற்பட்டதும் வெளி இடங்களில் இருந்து பொலிசார் தருவிக்கப்பட்டனர். ஆனால் எந்தப் பொலிஸ் நிலையத்திலிருந்து முதலில் பொலிசார் யாழ். நகருக்கு வந்தனர் என்பது நினைவில்லை. இவ்வாறு மேலதிகமாக தருவிக்கப்பட்ட பொலிசாரே ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். பொலிஸ் அதிபரால் எனக்குத் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி நான் கடமையாற்றினேன். யாழ்ப்பாணத்தில் நிலவிய பதட்ட நிலையைத் தணிப்பதில் உதவிப் பொலிஸ் மா அதிபர் என்னமுறைகளை கையாண்டார் [illegible] செய்தார் என்பதை என்னால் கூற முடியாது.

யாழ். தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் கட்டுப்பாட்டின் கீழ்மேலதிகமாகதருவிக்கப்பட்ட பொலிசார் யாழ் பொலிசாருடன் இணைந்து பணியாற்றினர் இவர்களுடன் இராணுவத்தினரும் கடற்படையினரும் சேர்ந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்

எதிர்க்கட்சித் தலைவர் ஆகஸ்ட் 16-ந் திகதி காலை 8 மணியளவில் பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்து நிலை பற்றி சுருக்கமாகக் கூறி பொலிஸ் அதிபரையும் என்னையும் முக்கிய சம்பவங்கள் நடந்த இடத்திற்கு வருமாறு கூறினார் நாங்கள் அங்கு போயிருந்தால் இங்கு சாட்சியமளித்திருக்க முடியாது

சட்டத்தரணி காலை 7 மணிக்கு முன் தொலைபேசியின் எதிர்க்கட்சித் தலைவராக பிரதமருடன் கதைக்கக்கூடியதாக இருந்திருக்கிறது ஆனால் பொலிஸ் அதிபருடன் கதைக்க முடியவில்லை தொலைபேசி விவகாரம் பற்றி அவர் குறை கூறியிருந்தார்

சாட்சி: திரு அமிர்தலிங்கத்திற்கு பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொள்ள முடியாதிருந்தால் அவர் என்னுடன் தொடர்பு கொண்டிருக்கலாம் எனது நேரடித் தொலைபேசி இணைப்பு இலக்கம் அவருக்கும் தெரியும்

யாழ் பொலிஸ் நிலைய நிருவாகப் பணிக்கு பொறுப்பாயிருந்த இன்ஸ்பெக்டர் திரு குருசாமி தமது சாட்சியத்தில் 16-ந் திகதி பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இணைப்புகள் எதுவும் பழுதடையவில்லை என்று கூறியமை பற்றி என்னால் எடுத்துச் சொல்ல முடியாது ரேடியோ செய்தி தொடர்புகளில் யாழ்ப்பாணத்திற்கும், கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கும் இடையே செய்தி பரிமாற்றங்களுக்காக விசேட முன்னுரிமை ஏற்பாடுகள் செய்யப்பட்டன உதவி பொலிஸ் மாஅதிபரின் உத்தரவின்படி ரேடியோ செய்தி தொடர்புகளுக்கென யாழ் பொலிஸ் அதிபர் செயற்பட்டு பிரிவை அமைத்து அதற்குப் பொறுப்பாக குருசாமியை நியமித்தார்.

கமிஷனர்: அவர் சப் இன்ஸ்பெக்டரா?

சாட்சி: ஆம்.

கமிஷனர்: கண்டியில் பொலிஸ் அதிபர் திரு. சண்முகம்தான் பொறுப்பாக இருந்தார். நீங்கள் ஏன் சப் இன்ஸ்பெக்டரை போட்டீர்கள்? உயர் அதிகாரிகளை நியமிக்கவேண்டுமென்ற விதிமுறை ஏதும் இல்லையா?

சாட்சி: விதிமுறை ஏதும் இல்லை.

சட்: கண்டியில் திரு சண்முகம் முற்றும்முழுதும் இப்பிரிவிற்குப் பொறுப்பாயிருந்தார். அங்கு எஸ் பி. யாழ்ப்பாணத்தில் எஸ். ஐ. அதனால்தான் எனது கற்றறிந்த நண்பர் திரு லெஸ்லி பாட்லட். எஸ் ஐ குருசாமியை எஸ். பி என வேடிக்கையாக அழைப்பார்.

கமிஷனர்: இதுதான் முதல் தடவை. நான் ஒரு எஸ். ஐ. இப்பிரிவிற்கு நியமித்தமை பற்றிக் கேள்விப்படுகின்றேன்.

சட்: உதவிப் பொலிஸ் [illegible] அதிபதி பொறுப்பான அதிகாரியை நியமிக்குமாறு உத்தரவிட்டும் சென். பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு விழா விவகாரம் தொடர்பாக நம்பிக்கைவைக்க முடியாத அதிகாரி எனதலைமை இன்ஸ்பெக்டர் திரு கொட்பிரி. குணசேகராவால் குறிப்பிடப்பட்ட திரு குருசாமியை பொறுப்புள்ள அதிகாரி எனத் தீர்மானித்தது விசித்திரமாய் உள்ளது.

சாட்சி; நாகவிகாரை தாக்கப்படுகிறது என்ற செய்தியை உடன் ரத்துச் செய்துவிட்டோம். இச்செய்தி அனுப்பப்பட்ட விவகாரத்தை திரு குருசாமி புத்தகக் குறிப்புக்களில் இருந்தோ அல்லது எவ்வழிகளால் கண்டுபிடித்து ரத்துச் செய்தார் என்பது எனக்குத் தெரியாது.

பண்ணையிலுள்ள சிங்களப் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாவலுக்கென ரோந்துசென்ற அல்விஸ், நந்தசிறி என்ற இரு கான்ஸ்டபிள்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகினர். இச்செய்தியும் ரேடியோ மூலம் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டு ஹெலிகொப்டர் ஒன்று பெறப்பட்டு கொழும்பு மருத்துவமனையில் பொலிசார் இருவரும் அனுமதிக்கப்பட்டனர்.

சட்: அப்போது குற்றப் பிரிவிற்கு பொறுப்பு அதிகாரியாக இருந்த திரு. தாமோதரம்பிள்ளை தனது சாட்சியத்தில் மானிப்பாயிலிருந்து வரும்போது ஒட்டுமடத்தில் வைத்து இவ்விரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சுடப்பட்டதாகக் கூறியிருக்கின்றார். அதுமட்டுமல்ல பொலிஸ் அதிபரின் உத்தரவின் பேரில் ஒட்டுமடத்தில் சுட்டதை பண்ணையில் சுட்டதாக அப் பொலிஸார் குறிப்பு எழுதியிருந்தது பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதுபற்றி என்ன சொல்லுகிறீர்

சாட்சி: எனக்குத் தெரியாது.

சட்: உங்கள் ரேடியோ செய்தியில், அவசியத்தின் பொருட்டு கொழும்பு மருத்துவ மனைக்கு அவர்களை அனுப்பவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள 'அவசியத்தின் பொருட்டு' என்பதற்கு யாழ்ப்பாணத்தில் சிகிச்சை பெறமுடியாது என்ற மறைமுக அர்த்தம் தொனிக்கிறது இல்லையா?

சாட்சி: இல்லை. அவர்களது விருப்பத்தின் பேரில் அநுராதபுரம் அனுப்பினோம்

சட்: இப்படியே எல்லாப் பொலிஸாரும் நாளடைவில் இங்கு சிகிச்சை பெற முடியாது என்று கூறி, தாம் விரும்பும் இடங்களுக்குக் கொண்டு போகவும் ஏன் ஒரு விமானம் ஒழுங்கு செய்வீர்களா? (கா-இ)

---

# விளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கு அருகாமையில்கோப்பாய் றோட்டில் மூன்று பரப்புக் காணியும் லைட் வசதிகளுடன் உள்ள வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். நா. மு. கந்தையா, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். 2682

நல்ல நிலையிலுள்ள வோக்ஸ் வேகன் 1300 C. C. கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், எஸ். இராஜதுரைலேந்திரன், விவேகானந்தா அச்சகம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2677

8-6-79 வலிகாமம் முத்துமாரி அம்மன் பொங்கல் திருவிழா அன்று கோவில் வீதியில் மின்கலம் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனை நடைபெறும். மின்கலத் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன்பாக்கும்; மின்கலத் வெளியீட்டு பிரசுரங்களும் அன்பளிப்பாக கொடுக்கப்படும். மேலுறைகளை சேகரித்து வைத்திருப்போர், எமது விளம்பர விற்பனை வாகனத்தில் கொடுத்து துவாய், அப்பியாசக்கொப்பி, மின்கலத் செய்தி, வெளியீட்டு புத்தகங்கள் யாவற்றையும் பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம். மின்கலத் யாழ்ப்பாணம். 2663

## பெயர் மாற்றம்

புலோலி மேற்கைச் சேர்ந்த வ. செல்வராசா ஆகிய நான் 01-06-79 தொடக்கம் எனது பெயரை வ. பாலகிருஷ்ணன் என மாற்றி இருப்பதையும் இத்திகதி தொடக்கம் எனது கையெழுத்தை வ. பாலகிருஷ்ணன் என வைச்சாத்திடுவேன் எனவும் இத்தால் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வ. பாலகிருஷ்ணன்
புலோலி மேற்கு,
2684 பருத்தித்துறை.

---

## பொன்விழா ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழா ஆலோசனைக் கூட்டம் இம்மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமைமாலை யாழ் 192 கஸ்தூரியார் வீதியில் உள்ள மண்டபத்தில் நடைபெறுகிறது

பேராசிரியர் ஆறு அழகப்பன் விசேஷ விருந்தினராகக் கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில் இப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் எல்லோரும் கலந்து ஆலோசனை வழங்குமாறு அமைப்பாளர் வித்துவான் வேலன் வேண்டுகோள் விடுத்துள்ளார் (இ)

---

உதைபந்தாட்டம்

## யாழ். கோஷ்டி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் தெரிவுக் கோஷ்டிக்கும்பருத்தித்துறைஉதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். தெரிவுக்கோஷ்டி 5-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டி வீரர்களையும் பிரதம விருந்தினரான யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் டாக்டர் ஜே. பி. சி. பிலிப்புக்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் திரு வி. கே. ஆறுமுகம் அறிமுகம் செய்துவைத்தார்

இப்போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது [இ]

---

## 'சமுதாய சிந்தனையுடன் நாம் வாழவேண்டும்'

(சாவகச்சேரி)

''இன்று எத்தனையோ பாடசாலைகளில் குடிப்பதற்குத் தண்ணீரின்றி, கிணறு வசதியில்லாமல் மாணவர்கள் அவதியுறுகின்றார்கள். பரந்தன், முல்லைத்தீவு போன்ற இடங்களில் 100 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதமே கல்வி கற்பித்து வருகின்றார்கள். இன்று வறுமை, வசதியீனம் காரணமாக 7-ம், 8-ம் வகுப்புடன் எத்தனையோ மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றார்கள். மக்களுடன் சேர்ந்து சமுதாயத்தைப் பற்றிச் சிந்தித்து நாம் வாழவேண்டும். அதனுல் முன்னேற்றம் இட்டும்''

இவ்வாறு மிருசுவில் றோ. க. வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆரம்பக்கல்வி போதனா முறைபற்றிய பொருட்காட்சி-கலைவிழாவில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சி. இராசநாயகம் பேசுகையில் கூறினார்

மறை ஆசிரியர் திரு. மருசலின், விவசாயப்போதனாசிரியர் திரு தாமோதரம்பிள்ளை ஆகியோரும் பேசினார்கள். வித்தியாலய அதிபர் திருமதி எம். எம். யோசப் நன்றி தெரிவித்துப் பேசினார். [அ]

---

## பாலஸ்தானம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் பாலஸ்தான விழா சிவாசாரியமணி பிரம்மஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்வாலயத்தில் பலதிருப்பணிகள் நடைபெற்று விரைவில் கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

---

# ''சாதி அடக்குமுறையை பேனாமுனையால் சாடுங்கள்''

## எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''இந்நாட்டின் உயர்ந்த பீடங்களில் இருப்போர் சாதி அடக்குமுறைக்கு எதிராக இலக்கியம் படைப்போரை 'இழிசனர் வழக்கினர்' என ஒதுக்க முற்பட்ட போதிலும் அந்த மக்களிலக்கியப் படைப்பாளிகள் தொடர்ந்தும் தமது பணியை முன்னெடுத்து வந்ததைப் போல இன்றைய நிலையில் முன்னரிலும் தீவிரமாகத் தமது படைப்புகளில் இவற்றைச் சித்திரிக்க வேண்டும். சமீபத்தில் உட்பட யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் இதனை வலியுறுத்துகின்றன''.

இவ்வாறு மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் எழுத்தாளர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றப்பொதுச்செயலாளர் திரு கே டானியலினால் விடுக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

''மனித உரிமைகளை அடைவதற்கான ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயமான வழிமுறைகளுக்குப்பொய்யுருவம்கொடுப்பதும், போலித்தனமான சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதும், பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாகத் தமிழ்மக்களின் கவனத்தைத் திசைதிருப்பி சாதி அமைப்பைப் பாதுகாக்க எடுக்கப்படும் கபடத்தனமான நடவடிக்கையேயன்றி வேறல்ல. இந்த உண்மையை தெளிவாக உணர்ந்து கலை இலக்கியக்காரர்கள் எந்தப்பக்கத்தில் இருப்பவர்களாயினும் மக்கள் மத்தியில் தமதுபடைப்புகளின் மூலம் பணியாற்றக் கடமைப்பட்டவர்களாவர்.

''இந்த நாட்டிலுள்ள சகல கலை இலக்கியக்காரர்களையும், துடிப்பான புதிய தலைமுறையினரையும், பொறுப்புவாய்ந்த கலை இலக்கிய ஸ்தாபனங்களையும் இந்தச் சமூக அநீதிகளைப் பேனாமுனையால் சாடி அழிக்க முன்வருமாறு அறைகூவி அழைக்கின்றோம்''.

---


## அறிவித்தல்

இல. 288, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 'ஸ்ரீ குமார விலாஸ்' ஸ்தாபனத்தின் உரிமையாளராக இருந்து காலஞ்சென்ற பெத்த பெருமாள் முருகையா நாராயணனுடன் கொடுக்கல் வாங்கல் உடைய யாவரும் தகுந்த சாட்சியத்துடன் என்னுடன் இன்றில் இருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளவும்.

இ. கமலநாதன் (சட்டத்தரணி)
'திருப்பதி' திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்
2671

"வேலை வாய்ப்பு

# கடந்த அரசாங்கத்தைவிட இன்றைய அரசாங்கம் படுமோசம்

## சிறுவர் ஆண்டு விழாவில் அமிர்தலிங்கம்

(பண்டத்தரிப்பு)

"தமிழ்மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் விடயத்தில் தற்போதைய அரசு கடந்த அரசிலும் பார்க்க மிகவும் மோசமான முறையில் நடந்து வருகின்றது. இந்த அரசு பதவிக்கு வந்தபின்பு வழங்கப்பட்டுள்ள 10 ஆயிரத்து500 புதிய ஆசிரியர் நியமனங்களில் 500 கூட தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. சுமார் 25 சதவீதம் வழங்கப்படவேண்டிய ஆசிரிய நியமனங்களில் 5 வீதமளவு கூடவழங்கப்படவில்லை"

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும், காங்கேசன்துறைத் தொகுதி எம். பியுமான திரு, அ. அமிர்தலிங்கம்அளவெட்டி தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற அனைத்துலக சிறுவர் தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. சு. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் ஆரம்பத்தில திரு, அமிர்தலிங்கம் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார்.

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து குறிப்பிட்டதாவது: ""கூட்டணி எம்- பிக்கள் வரசால் ஒதுக்கப்பட்ட பணத்தை சரிவரச் செலவு செய்யவில்லை என்று இங்கு உள்ளூராட்சி மன்றத்தேர்தல்பிரசாரத்திற்கு வந்த அமைச்சர்கள் தவறான பிரசாரத்திலு ஈடுபட்டனர். எம்மைப்பொறுத்தவரைஎமது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கடைசிச் சதம்வரை தேவையைப் பொறுத்து ஒதுக்கியுள்ளோம். எமது அடிப்படை இலட்சியம் எப்படியிருந்தபோதிலும்எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டுவருகின்றோம். அரசாங்கத்தோடு வாதாடி எவ்வளவு பணத்தை எமதுபிரதேச அபிவிருத்திக்கு பெற்றுக்கொள்ளமுடியுமோ அவ்வளவு பணத்தையும் பெற்று அபிவிருத்தி செய்து வருகின்றோம் எமது இளம் சந்ததிக்கு போதிய வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் நாங்கள் அரசுடன் வாதாடிவருகின்றோம்.

வேலைவங்கிப் படிவங்களை நிரப்பி அனுப்பி நேர்முகப் பரீட்சையும் முடிந்து வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று ஆவலோடு பல இளைஞர்கள் எதிர்பார்த்து காத்திருக்கையில் அண்மையில் காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலையில் 107 பேருக்கு துண்டுமுறை மூலம் வேலைவாய்ப்புகளை சில அமைச்சர்கள் வழங்கியுள்ளனர். இத்தவறான நடவடிக்கை பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எமது பலத்த ஆட்சேபனையைத்தெரிவித்திருக்கின்றேன்.

நான் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது தமிழ் மக்களின் பிரச்னைகளை எமது இலட்சியத்தை விபரமாக அமைச்சர்கள், தலைவர்கள் ஆகியோரிடத்தில் மாத்திரமல்ல தமிழ் நாட்டில் வதியும் லட்சக்கணக்கான மக்களிடமும் எடுத்துக் கூறி விளங்கப்படுத்திவிட்டு வந்துள்ளேன். எமது பிரச்னையை அங்குள்ள மக்கள் மிகவும் தெளிவாக அறிந்து வைத்துள்ளார்கள் இதை எவராலும் மாற்றிவிட முடியாது.

### அமெரிக்காவிலும் எமது இலட்சியம்...

தற்போது அமெரிக்காவிலும் எமது இலட்சியக்குரல் ஒலித்து வருகின்றது. அங்குள்ள அரசியல் தலைவர்களும். இயக்கங்களும் பொது மக்களும் எமது பிரச்னைகளை நன்கு உணர்ந்து ஆதரவு அளிக்கத் தொடங்கியுள்ளார்கள். அவர்களது ஆதரவுக்கு இங்கு சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அரசாங்கம் இவற்றைக் கண்டு மிரண்டு எமது ஒற்றுமையையும் கட்டுப்கோப்பையும் சிதைத்து சின்னாபின்னப் படுத்துவதற்கு முயற்சி செய்து வருகிறது.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பது போல நாம் ஒற்றுமை சிதையாது, இலட்சியத்தில் உறுதியாக இருந்தால் எவரும் எம்மை எதுவும் செய்துவிட முடியாது.

### சிறுபான்மை மக்கள் பிரச்னை

எமது மத்தியிலுள்ள சிறுபான்மை மக்களின் சமூக. பொருளாதார அபிவிருத்திக்கு உதவி செய்து அவர்களது முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதில் நான் மிகவும் உறுதியாக இருந்து தீவிரமாக செயல்பட்டு வருகிறேன்.

'இவ்விழாவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளார், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம், வட்டாரக்கல்வி அதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட பாடசாலைப் புத்தகங்களை மாணவருக்கு வழங்கினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. |இ|

# மக்கள் கருத்து

## அமைச்சர் 'இராசு'வின் கவனத்திற்கு

புதிய அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை இந்து சமய அபிவிருத்திக்காகப் பல திட்டங்கள் தீட்டுவதாகப் பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன.

திருக்கேதீஸ்வரம் திருக்கோணேஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம். முனீஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசாமிகோவில், நகுலேஸ்வரம், நயினாதீவுநாகபூஷணியம்மன் கோவில், செல்வச்சந்நிதி ஆகியகோவில்களின் சுற்றுடல் புனித நகராக்கப்படல் வேண்டும் என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்

ஆறுமுகநாவலர் மறைந்த நூற்றாண்டு இவ்வருடம் மார்கழிமாதத்துடன் முடிவடைகின்றது. இந்த நூற்றாண்டு விழாவைச் சிறந்த முறையில் கொண்டாடவும் ஆறுமுகநாவலரைப் போற்றுமுகமாக அழகான தபால் முத்திரை வெளியிடவும் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் சென்றமுறை வெளிவந்த முத்திரை நாவலரை அவமதிப்பது போன்றதாக இருந்தது இப்போது நாவலர் சிலையையே படம் பிடித்து தபால் தலை வெளியிடலாம்,

கிழக்கு மாகாணத்துப் பெருமகனாகிய விபுலானந்த அடிகளுக்கும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையவர்களுக்கும் முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்க அமைச்சர் இராசதுரை முன்வரவேண்டும் அதுமட்டுமல்ல இந்துப்பெரியார்களது கைவண்ணத்துப்பிரதிகள் அவர்கள் பாவித்த பொருட்களான நினைவுச் சின்னங்கள் முதலியன சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்க நடவடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்

அமைச்சர் இராசதுரை மேற்படி வேண்டுகோள்களை நன்கு ஆலோசித்துச் செயல்படுவாரென எதிர்பார்க்கின்றோம்.

வெ. சு. நடராசா
மருத்தித்துறைவீதி,
நல்லூர்.

° ° °

## என்னடி மீனாட்சி!

நான் முழுவதும் வழுத்துக் களைத்து ஆண்டவன் சந்நிதானத்திலாவது சற்று ஆறுதல் பெறலாமென எண்ணி நல்லூர் கந்தன் ஆலயத்திற்குச் செல்பவர்களுக்கு ஏற்படும் அனுபவங்களில் ஒன்று.

பயபக்தியோடு ஆண்டவனை நாடி மனதுக்கும், உடலுக்கும் சற்றுமாற்றத்தைநா என நல்லூர் ஆறுமுகசுவாமி வாசலில் நின்று முருகனை வழிபடும் சாதாரண மனிதன் தொடக்கம், அடியார்கள் வரை எல்லோரையும் கவருவது அருகிலுள்ள தேநீர்க்கடையிலிருந்து ஒலிபரப்பாகும் "என்னடி மீனாட்சி" முதல் 'அழகி ஒருத்தி இளநீர் விற்கிற' என்ற சினிமா அலறல்களாகும்.

எங்கு திரும்பினாலும் ஒரே சத்தமும் நெருக்கடிகளும் நிறைந்த யாழ் நகரிலே சற்று நேரமாவது இவைகளை மறந்து இறைவனடி நிழலை நினைந்து எமது கவலைகளையெல்லாம் மறந்துஆறுமுகனிடத்தில் ஆறுதல் பெறலாமென்று ஆறுமுகன் வாசலை நாடினால் காதிலே நாராசம்போல மேற்படி பாட்டுகளே ஒலிக்கின்றன

மனித சமுதாயத்திற்கு இப்படியான சந்தோஷங்கள் தேவைதான் என்றாலும் அவைகளை பெறுவதற்கு எவ்வளவோ இடங்களிருக்கின்றன மனக்கிடக்கைகளை இறைவனிடத்தில் சொல்லி அழுது ஆறுதல் பெறும் அந்த இடத்திலும் இவை அவசியம்தானா? சம்பந்தப்பட்டவர்கள் பிரயாசை எடுத்து இப்படியான கேளிக்கைகளுக்கு வேறு இடம் கொடுத்து பக்தர்களை பாதுகாப்பார்களாக

கே. கே. சாமி
திருநெல்வேலி

## திருக்கேதீச்சரத்தில் இன்றுரதோற்சவம்

சீர்காழியூர்ப் பிள்ளையாம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளாலும், தம்பிரான் தோழராம் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் ஏற்றிப் போற்றிப் பாடப்பெற்ற வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில் தொண்டர் நாள் தோறும் துதி செய் அருள் செய்யும் கேதிச்சரத்தில் பரிய திரை ஏறியவரும் பாலாவியின் கரைமேல் வட்டவரிநுதலாளாம் அன்னை கௌரியுடன் மத்தம் மதயானை உரி போர்த்த மணவாளன் எழுந்தருளியிருக்கின்ற ஆலயத்தில கடந்த மாதம் 30-ந் திகதி மிதுனலக்ன சுபவேளையில் கொடியேறி இன்று ரதோற்சவம் நடைபெறுகிறது. சுடுவார் பொடி நீறும் நல்ல துண்டப்பிறையும் அணிந்துள்ள எம்பிரான் திருவுள்ளம் பேரருள் சுரந்துள்ளமை சைவ நன்மக்கள் என்றென்றும் பெறற்கரிய பெரும் பேறாகும்.

திருக்கேதிச்சரம் என்னும் இத்திருத்தலத்தில் எம்பிரானும் சிவபிரான் சுயம்புலிங்க மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றார்.

மானுடரினால் தாபித்த மானுடலிங்கம் இருடிகளால் தாபிக்கப்பெற்ற ஆரிடலிங்கம் தேவர்களால் தாபிக்கப்படுகின்ற தைவிகலிங்கம், சிவகணங்களால் தாபிக்கப்பட்ட காணலிங்கம் ஆகிய நால்வகை லிங்கங்களிலும் பன்மடங்கு மேலானது சுயம்பு லிங்கமூர்த்தி என்பதும் இவ பிரானுணவர் சுயம்புலிங்கத்தில் எக்காலத்தும் எழுந்தருளியிருந்து தமது அடியவர்களுக்குத் திருவருள் புரிவர் என்பதும் ஆகம முடிபு ஆதலின் இத்தலம் மூர்த்தி மகிமை மிக்கது என்பதுடன் பாவம் வினையறுக்கும் எமது ஈசனும் கௌரிசன் கரைமேல் எழுந்தருளியிருக்கிற காரணத்தால் இத்தலத்துள்ள பாலாவித் தீர்த்தமும் மகிமை மிக்கதாகின்றது.

-- முருகு --

தல்லைநகர் வந்துதித்துச் சிவப்பணியும் தமிழ்ப்பணியும் ஒருசேர இயற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானால் "தேன் பொந்து" என வியந்து மகிழ்ந்து போற்றப்பட்டது இத்திருக்கேதீச்சரத் திருத்தலம்.

பலநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் வரலாற்றுத்தொன்மையும், திருவருள் மகிமையும் மிக்குடைத்தான இச்சிவாலயம் பதுப்பிக்கப்பட்டு 1976-ம் ஆண்டு நடுப்பகுதியில் திருக்குடமுழுக்குத் திருவிழா இனிதே நிறைவெய்தியதனையும் 1977-ம் ஆண்டுதான் முதன்முதலாக இச்சிவாலயத்தில் கொடியேற்றி உற்சவம் பத்து நாட்கள் சிறப்புற நடாத்தப்பெற்றதனையும் அதனைத் தொடர்ந்து இவ்

(5-ம் பக்கம் பார்க்க)

## உலகனைத்தையும் ஈன்றெடுத்த அன்னை பருவதவர்த்தனி

-- சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் --

இந்து மதத்தில் கடவுளை கர்த்தா என்றும் கருணாநிதி என்றும், நாயகன் எனறும் நாநிலை என்றும். மெய்ப்பொருள் என்றும், தலைவன் என்றும் தோழன் என்றும் இன்னும் எண்ணிய விதங்களில் அழைத்து. போற்றி. துதித்து வணங்குகிறோம். இத்தகைய நிலைகள்யாவற்றிலும் அவனைத் தாய் என்றுசொல்வது தலையாயது. ஏனென்றால் தாய்க்கும். பிள்ளைக்கும் இடையிலிருக்கும் இணக்கம் ஒப்பற்றது.

இறைவனது திருவருளில் தேங்கித் திளைத்திட்ட தாயுமான சுவாமிகள் "என்றினுக்கும் சேதா கனிந்து இரங்கல் போல எனக்கென்று இரங்குவாய் கருணை எந்தாய் பராபரமே" என்கின்றார் பக்திப் பிரவாகம் பெருக்கெடுக்கும் போது கடவுளை தாய் என்று அழைப்பது இயல்பு பிரபஞ்ச மயக்கத்திலிருந்து, மாயையிலிருந்தும்- நாம் விடுபடுவதற்கு சக்தி தத்துவமும், சக்தி உபாசனையும் பெரிதும் பயன்படும்.

சக்தியின் திருவிளையாட்டை அணுமுதல் அண்ட பகிரண்டம் வரை எங்கும் காணலாம் சக்தி அறிவு மயமானது. குழந்தையைப் பெற்றபின் தாய் வேறாகவும் பிள்ளை வேறாகவும் ஆய்விடுகின்றனர் ஆனால் அண்டங்களை ஈன்றிருக்கும் நாயகி என்றைக்கும் அவைகளினின்று விலகினவள் அல்லள். அவளே உலகனைத்துமாய் இருக்கின்றாள். பிரபஞ்சம் யாவும் அவள் மயம் ஆதலால் இயற்கையை உள்ளவாறு அறிவது அறிவது அவளை அறிவதாகும்.

மறைவு- தோற்றத்தின் மூலம் மாயாசக்தி மாந்தர்க்குச் செய்யும் நன்மை என்னவென்றால் அவர்களுக்கு இன்ப நுகர்ச்சியும் விடுபேறும் அளிப்பதாம் புல்லாகிப் பூடாகிப் பறவையாகி, விலங்காகி, மனிதராய், தேவராய்- இவ்வாறு விரும்பிய பிறவிகளையெல்லாம் எடுத்து. வேண்டிய போகங்களையெல்லாம் அனுபவித்துவிட்டு முக்தியடைதலே ஜீவர்களின் நோக்கமாகும் இதற்கு உடந்தையாக இருக்கும் அன்னைக்கு புக்தி முக்தி பிரதாயினி என்றுபெயர் அதாவது போகத்தையும், மோக்ஷத்தையும் அளிப்பவள் அவளே. போகம் வேண்டுமென்கிற அவா இருக்கும் பரியந்தம் அதற்கேற்ற பிறவிகளை அவளே கொடுக்கின்றாள் எண்ணிறந்த பிறவி எடுத்து இளைத்தபின்பு முக்தி வேண்டுபவர்களுக்கு சிவகதிக்கு அவள் வழிகாட்டுகின்றாள் இவ்வாறு வேண்டியவர்க்கு வேண்டியதை வேண்டியாங்கு வகுத்தளிக்கின்றமையால் அகில அண்டங்களுக்கு அவள் அன்

[4-ம் பக்கம் பார்க்க]

## கும்பாபிஷேகம் இன்று

(ஊரெழு)

ஊரெழு-இழாலை மஞ்ஞன் மணி அம்பாளுக்கு புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இன்று அதிகாலை நடைபெறுகிறது

கும்பாபிஷேகம் ஊரெழு சிவஸ்ரீ. சோ வாகீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். 'பிரதிஷ்டா கலாநிதி" சிவஸ்ரீ நா சோமாஸ்கந்தக் குருக்கள் சித்தாந்தபண்டிதர்" சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் உட்பட இன்னும் பல குருமார்கள் விழாவில் பங்குபற்றி கிரியைகளை நடாத்தி வைப்பார்கள்.

தமிழக அரசின் கடிதக் கோவைகள்

# தமிழ் மொழியில் இருக்கவேண்டும்

## எம். ஜி. ஆர் உத்தரவு

சென்னை, ஜூன். 6

தமிழக அரசின் அதிகாரிகளிடமிருந்து இனிமேல் அனுப்பப்படும் சகல பைல்களும் தமிழ் மொழியிலேயே இருக்கவேண்டுமென்று தமிழகமுதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் சகல அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அந்தப் பைல்களில் அவசியம் ஏற்படும் பட்சத்தில் மட்டும் சட்டரீதியான வாசகங்கள் வேண்டுமானால் தமிழுடன் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் திரு. இராமச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார். [இ]

## மத்திய அரசுக்கு கருணாநிதி கோரிக்கை

புதுச்சேரி, ஜூன். 6

புதுச்சேரியில் மக்கள் ஆட்சி இடம்பெறக் கூடியவகையில் அதன் சட்டசபைத் தேர்தலை உடன் நடத்துமாறு தமிழக எதிர்க்கட்சித் தலைவர் திரு மு. கருணாநிதி மத்திய அரசைக் கேட்டுள்ளார். [இ]

## அனல் காற்றுக்கு 9 பேர் பலி!

புதுடில்லி, ஜூன். 6

இந்தியாவின் வடகிழக்கும் பகுதியில் வீசிய அனல் காற்றினால் கடந்த 2 நாட்களுள் 9 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. [இ]

## மிருசுவில் ஶ்ரீ கலைமகள் வித்தியா அபிவிருத்திச் சங்கம்

[சாவகச்சேரி]

மிருசுவில் ஶ்ரீ க வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்க அமைப்புக் கூட்டம் வித்தியாலய அதிபர் திருமதி எம். யோசேப் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி எம். எம். யோசப் [அதிபர்]. உபதலைவர்: திருமதி பூமகள் நடராசமூர்த்தி, செயலாளர்: வே. கந்தசாமி [ஆசிரியர்], உபசெயலாளர்கள்: வெ. யோகரத்தினம், செல்வி உ. கணபதிப்பிள்ளை [ஆசிரியை]. பொருளாளர்: திருமதி ம. இலங்கைநாயகம், 11 பேர் உறுப்பினராக தெரிவாகினர். [க]

## 'டுவிஸ்ட்' வீரர் தொடர்ந்து ஆடுகிறார்

[மாவிட்டபுரம்]

'டுவிஸ்ட்' நடனத்தில் உலகசாதனையை நிலைநாட்ட காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வெள்ளிவிழா அரங்கில் டுவிஸ்ட் ஆடிவரும் 21 வயது இளைஞர் வின்சன்ற் தொடர்ந்து உற்சாகமாக ஆடிவருகிறார்.

கடந்த புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆட்டத்தை ஆரம்பித்த இவர் தொடர்ந்து இரவுபகலாக ஆடிவருகிறார், தினமும் ஏராளமானோர் இவருக்கு உற்சாகம் கொடுத்து வருகிறார்கள். கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை நலன்புரி உத்தியோகத்தர் திரு அன்ரன் அன்னுசாமிப்பிள்ளை நடுவராகக் கடமையாற்றிவருகிறார்.

இளைஞர்கள், யுவதிகள், சிறுவர் சிறுமியர் ஆகியோர் சாதனை வீரருடன் சேர்ந்து ஆடுகிறார்கள். [ஈ]

காஙுவில்

## 10 விமான அதிகாரிகள் கமிட்டி ஆட்சி செய்கிறது

அக்ரா, ஜூன் 6

கானாவில் புரட்சிச்சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள விமானப்படையின் 10 உயர் அதிகாரிகளைக் கொண்ட கமிட்டி ஒன்று தற்போது நிர்வாகத்தை நடத்திவருகிறது.

விமானப்படை லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி ரோலிங்ஸ் இக்கமிட்டிக்குத் தலைவராக இருக்கிறார். [இ]

மத்தொனி

## ஶ்ரீ முருகன் கி. மு. சங்கம்

(தெல்லிப்பழை)

கரவெட்டி மேற்கு மத்தொனி ஶ்ரீ முருகன் கிராம முன்னேற்றச் சங்க உத்தியோகத்தர்கள் தெரிவுக் கூட்டம் சங்கப் போஷகர் திரு மா. சுப்பையா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வ. செல்வராசா, உபதலைவர் க. இரத்தினம், செயலாளர் ம. சிவசுப்பிரமணியம், துணைச்செயலாளர் க. உதயகுமார், தனாதிகாரி ச. மயில்வாகனம், உபதனாதிகாரி சி. செல்வநாயகம்.

## புதிய பால்மா தொழிற்சாலை

[கொழும்பு]

புதிய பால்மா அடைக்கும் தொழிற்சாலையொன்று ஒரு வருடத்துக்குள் நிறுவப்படுமென்றும் இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட விருப்பதாகவும் வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## சகல கிளைகளுக்கும் போட்டியின்றித் தெரிவு

[பண்டத்தரிப்பு]

இளவெட்டி-கல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தேர்தலுக்கு நியமனப்பத்திரங்கள் அண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது சங்கத்தின் 11 கிளைகளுக்கும் உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

தற்போது இயக்குநர்சபை உறுப்பினராக இருப்பவர்கள் அனைவரும் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [இ]

## தி. மு. க.வுக்கு ஆதரவளிக்க முடிவு

சென்னை, ஜூன் 6

தஞ்சாவூர் இடைத்தேர்தலில் போட்டியிடும் தி மு க. வேட்பாளர் அன்பில் தர்மலிங்கத்தையும், நாகை தொகுதியில் போட்டியிடும் கம்யூனிஸ்ட் வேட்பாளர் முருகையனையும் ஆதரிப்பதென்று அகில இந்திய போர்வார்ட் பிளக்கட்சியின் தமிழ் நாடு கிளை தீர்மானித்துள்ளது.

இதே வேளையில் தஞ்சையிலும் நாகையிலும் போட்டியிடும் இந்திரா காங்கிரஸ், அ. இ. அண்ணா. தி. மு. க. வேட்பாளர்களை ஆதரிப்பதென்று கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி முடிவுசெய்துள்ளது. [இ]

## ஷாவுக்கு பாதுகாப்பு அளிக்கமுடியாது

மெக்ஸிக்கோசிற்றி, ஜூன் 6

முன்னாள் ஈரான் மன்னர் ஷா மெக்ஸிக்கோ வரும் பட்சத்தில் அவருடைய பாதுகாப்புக்கு மெக்ஸிக்கோ அரசு பொறுப்பாக இருக்கமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோவில் ஷாவுக்கு தற்கு ஆறுமாதவிசா மட்டுமே வழங்கப்படுமென்றும் அவருக்கு இதுவரை விசா வழங்கப்படவில்லையென்றும் மெக்ஸிக்கோ அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [கு-இ]

'சுதந்திரப் போராட்டத்தில்

## எத்தனை இடர்வரினும் அதனை தாங்கும் இதயம் வேண்டும்''

### வவனியா வெற்றி விழாவில் 'அமிர்'

[வவனியா]

''நாடுமுழுவதுக்கும் ஒரு சட்டம். ஆனால் வவனியாவில் மட்டும் விசித்திரமான சட்டம் அமுல் படுத்தப்படுகிறது. நீதிக்கு அப்பாற்பட்ட முறையில் சட்டம் அமையுமானால் அதுவே சட்டமறுப்பு உருவாக தூண்டுகோலாக அமையும்''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வவனியா நகரசபை மைதானத்தில் நடந்த வெற்றிவிழாவில் பேசுகையில் கூறினார்.

வவனியா நகரசபைத் தலைவர் திரு. க. தேவிவரன் தலைமையில் நடைபெற்ற வெற்றி விழாவில் கூட்டணி எம். பிக்கள் பலர் கலந்து கொண்டனர். திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''வெள்ளையரை எதிர்த்து வெற்றிவாகை சூடிய, ஆட்சி செலுத்திய பண்டார வன்னியன் ஆண்டபூமி இது. எனவே இங்குள்ள மக்கள் துணிந்து நின்று இயங்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். எமது சுதந்திரம் கருதி சொந்த மண்ணுக்காக எத்தனை துயர்வரினும் அதனைத்தாங்கும் இதயத்துடனும் தயாராக இருக்க வேண்டும். தர்மத்தின் போராட்டம் வெற்றி பெற்றேதீரும்''

அமெரிக்காவில் நம் நிலையை மிகத் தெளிவாக எமதுதலைவர் எடுத்துக் கூறியுள்ளார். உலக அரங்கில் எமது விடுதலைப் போராட்டம் பறை சாற்றப்படுகிறது. எனவே நாம் வெல்லும்நாள் வெகுதூரத்திலில்லை''

திரு. ஈழவேந்தன், வண்ணை ஆனந்தன், கோவை மகேசன் ஆகியோரும் பேசினர். (கு)

## உலகனைத்தையும்-

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

னைகளாக இலங்குகின்றன. இவ்வாறு சக்தித்தத்துவத்தை உள்ளடக்கி அகில உலகிற்கும் ஆன்மாக்களுக்கு தலைவியாக, தாயாக இருக்கும் இறைவி, பருவதவர்த்தனி என்றும் மனோன்மணி என்றும் திருப்பெயரைத் தாங்கி வடசெழுகிழக்கு, கிழாலைப் பகுதியில் இருந்து எமக்கருள் பாலிக்கிறாள். அவளின் புனராவர்தன திருக்குடத் திருமஞ்சனப்பெருவிழாக்கண்டு அவள் பெருங்கருணையைப் பெறுவோமாக.

## ஏகமனதாகத் தெரிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைக்கான சுருவில் கிளைக்குழுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சுருவில் கிளையைச் சேர்ந்த 9 பேர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் கி. திருவருள், டெ. சின்னத்துரை, க. இ. கந்தசாமி, ம. நடராசா, த. பாலசுந்தரம், ந. சபேசன், திருமதிகள் இ. லலிதாம்பிகை, ந. சுசிலாதேவி, இ. நாகேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாவர். [கு-இ]

நெற் களைகளை ஒழிக்க நிகரற்ற வழி

ஹெடோனல் எம் 40%

40% எம். சி. பீ. ஏ. சோடியம், பொட்டேஷியம் உப்புகள் கொண்டது.

நெற் பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகளை அதி வன்மையுடன் கட்டுப் படுத்த வல்லது ஹெடோனல் எம் 40%. அபாயகரமான அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் மிகச் சுலபமாக அழித்தொழித்து, நெல் விளைச்சல் நேர்த்தியாக நிகரற்றுப் பெருக வழி செய்கிறது அது.

ஹெடோனல் எம் 40% பாவித்து விளைச்சலைக் கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.




தரமான பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர் :

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

தொலைபேசி: 93563, 96331-6

molADS

பல்கலைக்கழகத் தேர்வு

# மேலைநாடுகளில் போன்று இங்கும் அமையவேண்டும்

## பரியோவான் பரிசளிப்பு விழாவில் துணை வேந்தா வித்தியானந்தன்

(அரியாலை)

''பல்கலைக்கழகத் தேர்வுகள் மேலைநாடுகளில் நிலவுவது போல அமையவேண்டும். முக்கியமாகத் தமிழ்மாணவர்களுக்குப் பாதகமாயுள்ளதாக இது அமையவேண்டும். மாணவர் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையைத் தெரிவுசெய்யும் போது பெற்றோரும் அதில் கவனம்செலுத்த வேண்டும். 80 விதமான மாணவர்கள் விஞ்ஞானத்துறையை விரும்புகின்றனர். ஆனால் இறுதித் தேர்வுகளில் சித்திபெறத் தவறிவிடுகிறார்கள். இதனால்பெரும் செலவினம் ஏற்படுகிறது, நாட்டுக்குப் பயனுள்ள துறைகளில் மாணவர் ஈடுபட முன்வர வேண்டும் இன்று கல்வி பெறும் மாணவர்கள் தமது கல்விக்கு வேண்டிய துணை நூல்களை வாசிப்பது மிகவும் குறைவாகவுள்ளது. இன்றைய மாணவர்கள் ஆசிரியர்களின் குறிப்புக்களையும் பிரத்தியேகமாக வெளியீடுகளில் தரப்படும் ஆசிரியர்களின் குறிப்புகளையும் நம்பி பல்கலைக்கழகப் பிரவேசம்செய்யமுடியுமென்று நம்புகிறார்கள். இதனை விடுத்து கல்விக்குத் துணைபுரியக் கூடிய நூல்களை வாசிக்கும்பழக்கங்களைக்கைக்கொள்ளவேண்டும்.''

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் 'யாழ் பரியோவான் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்

யாழ்ப்பாண அர்ச்சிஷ்ட் வணக்கத்திற்குரிய திருச்சபை தலைமை அருட்திரு சாம் டி ஹேவர் சிங்டன் அடிகள் தலைமையில் நடைபெற்ற இடபரிசளிப்பு விழாவில் உபவேந்தர்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

' கிறிஸ்தவ மிஷனரிகள் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய சேவைகள் புரிந்துள்ளனர், அப்படியாக அவர்களால் கட்டி வளர்க்கப்பட்ட கல்லூரிகளில் பரியோவான் கல்லூரியும் ஒன்றாகும்

முன்னைய காலங்களில் ஆசிரியர் - பெற்றோர் - மாணவர் மத்தியில் தொடர்பு மிகவும் நெருக்கமாக இருந்துவந்தது இதனால் ஆசிரியர் மாணவர்களின் வீடுகளுக்கு வந்து அவர்களைக் கண்காணித்துவந்தனர் ஆனால் இன்று அந்த நிலை அருகியுள்ளது மாணவர்களின் வளர்ச்சிக்கு இந்த உறவு மிக மிக அவசியமாகும். தொழில் முறைக் கல்வி மத்திய வகுப்புகளில் இடம்பெறவேண்டும்.

இது நடைமுறை வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாகும் மாணவர்களுக்குக் கல்விபோதிக்கும் ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட பட்டதாரிகளாக அன்றேல் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருப்பது நல்லதாகும் வெகுவிரைவில் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்றும்முறையை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

''அநேக மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புப் பரீட்சையில் மிகவும் சிறந்தமுறையில் சித்திபெற்று பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுகின்றனர். இவர்களில்பெரும்பாலானோர் வைத்தியப்பிரிவையும் பொறியியல் பிரிவையும் மேற்கொள்கின்றனர். இப்படியாகப் பிரவேசம் செய்த இவர்கள் தமது படிப்பின் இறுதி ஆண்டுப் பரீட்சையில் சித்திபெறத் தவறிவிடுகிறார்கள், இதனால் மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் மிகவும் கவலையடைகின்றனர் தற்போதைய மாணவர்கள் தாம் நினைத்த பிரிவுகள் கிடைக்காவிட்டால் தமக்குக்கிடைத்த பிரிவுகளில் மேற்படிப்பை மேற்கொள்ள விரும்புகிறார்களில்லை, விசேடமாக வைத்திய பிரிவை விரும்பும் மாணவர்களுக்கு பல் வைத்தியம், விவசாயம், மிருகவைத்தியம் போன்றவை கிடைத்தால் அவற்றை விரும்பிச் செய்யாது கைவிட்டுவிடுகிறார்கள். இதனால் அடுத்தவருடம் அப்பிரிவுகூடக் கிடைக்காமல் போகிறது. ஆகவே இந்த மனோநிலையை மாற்றி தமக்குக் கிடைக்கும் பிரிவை மேற்கொள்ளக்கூடிய மனத்தைரியத்தை மாணவர்கள் கொண்டவர்களாக மாறவேண்டும். கல்லூரிகளில்வைத்தியபிரிவுகளில் விவசாயத்தை ஒருபாடமாகப் படிப்பிப்பது வரவேற்கத்தக்கதாகும். இப்படிப் படிப்பிப்பதனால் பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறையை மேற்கொள்ளும் மாணவர்கள் பெரும் நன்மையடைவார்கள். வெகுவிரைவில் யாழ் பல்கலைக்கழகத்தில் விவசாயபோதனா பீடமும் அமைக்கப்படவுள்ளது''

கல்லூரி அதிபர் திரு. வி. ஈ. ஆனந்தராசா கல்லூரியின் அறிக்கையை சமர்ப்பித்துப் பேசினார். துணை வேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் பரிசில்களை வழங்கினார். [அ]

## நெடுந்தீவு திருக்குறள் மாநாடு: டாக்டர் அழகப்பன் சிறப்புரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மறைக்கழகத்தின் பத்தொன்பதாவது திருக்குறள் மாநாடு இம்மாதம் 9ம், 10ம் திகதிகளில் நெடுந்தீவு மகா வித்தியாலய மாநாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைப்பேராசிரியர் கலைமாவலர் கலாநிதி ஆறு. அழகப்பன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். வைத்திய கலாநிதி சிவஞானசுந்தரம் (நந்தி) மங்கள விளக்கேற்றி மாநாட்டை ஆரம்பித்துவைக்க திருவள்ளுவரின் திருவுருவச்சிலையை அருட்திரு இ. பீற்றர் துரைரத்தினம் அடிகளார் திரைநீக்கம்செய்து வைப்பார்.

முதல் நாளான 9ம் திகதி தமிழ் மறைக்கழகத்தின் தலைவரும் ஊர்காவற்றுறை எம். பி.யுமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் மாநாட்டில் பிற்பகல் 2மணிக்கு திருக்குறள் ஏட்டுச்சுவடி நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். ஊர்வலம் மாநாட்டுமண்டபத்தை வந்தடைந்ததும் முதல் நிகழ்ச்சியாக மாநாட்டு சிறப்பு மலர் வெளியிடப்படும்.

அறிவுப் பொழில் மன்றத்தினரின் ஆதரவில்வெளியிடப்படவுள்ள இம்மலரின் முதல் பிரதியை பண்டிதர் இரத்தினத்திடமிருந்து 'நாதன்ஸ்' அதிபர் திரு த மாணிக்கவாசகர் பெற்றுக்கொள்வார். வெளியீட்டுரையை திரு வை இராஜேஸ்வரனும் விமர்சன உரையை புலவர் ஈழத்துச் சிவானந்தனும் ஆற்றுவர்

செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வ பொன்னம்பலம், திரு எஸ் நடராசா, திரு.சு.சிவநாயகமூர்த்தி திருமு ஆலாலசுந்தரம். புலவர் ஏ டபிள்யு அரியநாயகம் சொல்லின் செல்வன் சு அடைக்கலமுத்து ஆகியோர் உரையாற்றுவார்.

'வள்ளுவர் கண்ட பெண்மை' என்ற தலைப்பில் புலவர் க த ஞானப்பிரகாசம் தலைமையில் கவியரங்கு நடைபெறும்.

கலைமாவலர் கலாநிதி ஆறு அழகப்பன் சிறப்புரையைத் தொடர்ந்து நடன அரங்கு நாடக அரங்கு என்பன இடம் பெறும்.

இரண்டாம் நாளான 10ந் திகதி அருட்திரு எஸ் சி ஆனல்ட் தலைமையில் காலை விழாவில் திருக்குறள் பேச்சு, மனனப்போட்டிகள் நடைபெறும். மாலை நிகழ்ச்சிகள் 6-00 மணிக்கு மாநாட்டுச் செயலவைத் தலைவர் திரு இரா சின்னத்தம்பி தலைமையில நடைபெறும். யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அ சண்முகதாஸ், நூலகர் திரு ஆ சிவநேசச்செல்வன், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு வை சொக்கலிங்கம், ஊர்காவற்றுறை உ அ அ திரு எஸ் சடாட்சரசண்முகதாஸ், திருமதி ம சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றுவர்.

திரு க சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் பட்டிமன்றமும் கோவை மகேசன் தலைமையில் கவியரங்கமும் இசையரங்கு, நடன அரங்கு, நாடக அரங்கு, என்பனவும் கலைக்காவலர் ஆறு அழகப்பனின் சிறப்புரையும் இடம் பெறும்.

மாநாட்டை முன்னிட்டு குறிகட்டுவானிலிருந்து விசேட படகுச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. [கு]

## ரூ. 50 அபராதம்

(சாவகச்சேரி)

தெல்லிப்பழைப் புகையிரத நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம்வரைபிரயாணச்சீட்டைப் பெற்று ரயிலில் பிரயாணம் மேற்கொண்ட ஒருவர் பழை வரை தமது பிரயாணத்தைத் தொடர்ந்தார். பளையில் வைத்துப் புகையிரதப்பகுதி அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார் யாழ்ப்பாணத்தில் இறங்கவேண்டிய இவர், தூக்கத்தில் தன்னை மறந்த பிரயாணம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது

சாவகச்சேரி நீதவான்நீதிமன்றில் திரு. கே பாலசிட்ணர் முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி இவருக்கு 50 ரூபா அபராதம் விதித்தார் [அ]

## மாணவர் வீதிப் பாதுகாப்பு
# யாழ். நகருக்கு வெளியிலும் மேலும் விஸ்தரிக்கப்படும்
### பொலிஸ் அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள பாடசாலைகளின் முன்னால் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு வேண்டிய சமிக்ஞைப் பலகைகளையும், கையுறைகளையும் யாழ். ரோட்டறிக் கழகமும். கொட்டடி லேடன் பெனியன் தொழிற்சாலையும் யாழ் பொலிசாரிடம் வழங்கியுள்ளன.

இந்த அன்பளிப்புகளுக்கு மேற்படி நிறுவனங்களுக்கு நன்றி தெரிவித்த பொலிஸ் அதிபர் திரு. லியோ பெரோரா மாணவர்களின் இச் சேவை குறித்து மேலும் கூறியதாவது:

யாழ் நகரில் முதல்முதலாக மேற்கொள்ளப்பட்ட இச் சேவை வெற்றியளிக்கும் பட்சத்தில் யாழ். நகருக்குவெளியிலும் இச்சேவை பரவலாக்கப்படும் இதனால்மாணவ, மாணவிகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய நிலை உருவாகிறது. இதற்குப் பொதுமக்களும், சாரதிகளும் உதவியாக இருக்க வேண்டும். (கொ-இ)

புங்குடுதீவு குடிநீர்விநியோகம்

# காலம் தாழ்த்தாது உடன் நடவடிக்கை எடுக்கவும்
### பண்டிதர் அவசர தந்தி

(வேலணை)

''புங்குடுதீவு முழுவதும் குடிதண்ணீர் விநியோகம் செய்ய 30 ஆயிரம் ரூபாவை யாழ் கச்சேரிக்கு வழங்கியுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் தெரிவித்துள்ளார். எனவே பணம் இல்லை என்ற காரணம் கூறாது காலம் தாழ்த்தாது குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளவும்.''

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா பொ இரத்தினம் யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரைத் தந்தி மூலம்கேட்டுள்ளார்

அவர் தமது தந்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது!

''புங்குடுதீவு முழுவதற்கும் பவுசர் வரும்வரை காத்திராமல் முன்னைய ஆண்டுகளைப் போல் லொறிமூலம் குடிதண்ணீர் விநியோகிக்குமாறு ஏற்கனவே நான் கேட்டிருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாதது கவலைக்குரியது என யாழ் மாவட்ட அமைச்சருக்கு ஏற்கனவே தந்தி அனுப்பியிருந்தேன்

இந்நீர் விநியோகத்திற்கு டெண்டர் கோரப்பட்டுள்ளதென யாழ் சமூக சேவைகள் பிரதிப்பணிப்பாளர் திரு செல்வநாதரன் அறிவித்துள்ளார் எனினும் குடிநீர் கஷ்டத்தைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்கவும்.'' (இ)

## அமைச்சர்களின் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தனர். அமைச்சர்கள், பிரதியமைச்சர்களுக்கு அடுத்த முன்றும் வரிசையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம், சபாநாயகர் போன்றோர் காணப்பட்டனர் அணிசேரா நாடுகளின் தலைவராக முன்பு விளங்கிய முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஐந்தாவது வரிசையில் காணப்பட்டார்.

### ஜனாதிபதி உரை

மகாநாட்டை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி பேசுகையில் அணிசேரா நாடுகளுக்குள்ளேயும் சர்வதேச ரீதியிலும் பொருளாதாரநீதி நிலவுவதற்கு வழியேற்படவேண்டும் என்றும் அணிசேரா கொள்கையை இலங்கைஉறுதியாகப் பின்பற்றி வருவதை ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

### நேருவுக்கு புகழ்மாலை

அணிசேராமை என்ற சொல்லை முதன் முதலில் 1954ம் ஆண்டு இலங்கையில் நடத்த மகாநாட்டில் காலஞ்சென்ற இந்தியப் பிரதம மந்திரி திரு. ஜவஹர்லால் நேரு தான் பிரயோகித்தார் என்று கூறிய ஜனாதிபதி திரு நேருவுக்கு புகழ்மாலை சூட்டினார் இக்கொள்கை பின்னர் 1955ல் பாண்டுங் மகாநாட்டிலும் 61ம் ஆண்டு பெல்கிரேட் மகாநாட்டிலும் உறுதிப்படுத்தப்பட்டது என்று அவர் தெரிவித்தார். வல்லரசு ராணுவ அணிகளுக்கு எதிரான ஒரு அணியாக இந்த அமைப்பு இருந்துவருகிறதென்றும் அவர் தெரிவித்தார். [ம]

## வேலைக்குத் திரும்பினர்

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நேற்றுக்காலை தமது வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பினர்

சங்கத்தின் இயக்குநர் சபைக்கும் ஊழியர் பிரதிநிதிகளுக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டதையடுத்தே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

ஜனவரி, மே மாதங்களுக்கான 50 ரூபா அலவன்ஸை உடன் வழங்குவதென்றும் பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஏதாவது ஒரு மாதத்தில் சங்கத்திற்கு லாபம் காட்டப்பட்டால் ஜனவரி முதல் மே மாதம் வரையிலான 5 மாதங்களுக்கும் 50 ரூபா அலவன்ஸை வழங்குவதென்றும் ஏற்கனவே சங்கம் தீர்மானித்தது இதையடுத்து குறிப்பிட்ட 3 மாதங்களின் கணக்குகளைச்சரிபார்த்த ஊழியர்கள் ஏப்ரல் மாதம் 37,151 ரூபா 99 சதம் லாபம் என இயக்குநர் சபையிடம்தெரிவித்தனர் இதை அடுத்து சகல மாதங்களுக்கும் 50 ரூபா அலவன்ஸ் வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்ட பின்னரே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. (இ)

## உயிர்ப்பலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோவிலில் பலியிடுவதைத் தடைசெய்ய வேண்டுமெனக் கோரி சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்ய பட்டது. இவ்வழக்கில் வழக்காளிகள் திரு. எஸ். சந்திரவேதபிள்ளை, சட்டத்தரணி திரு செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜராகிவாதிட்டார் இதன்பேரில் நீதவான் எதிர்வரும் 13ம் திகதியோ அல்லது அதற்கு முன்போ அல்லது பின்போ இக்கோயிலில் உயிர்ப்பலியிடக் கூடாதெனக் கட்டளை பிறப்பித்து வழக்கு விசாரணையை வரும் 23ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanadu P B No: 49, Telegrams: Eelanadu Phone: 489,